# முட்டுக்கட்டை போடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 265
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஐப்பசி 18 ஷவ்வால் 11 ஞாயிற்றுக்கிழமை (3-11-68)

## பிரதமர் எச்சரிக்கை

கொழும்பு, சனி

நாட்டின் முன்னேற்றத்துக்கு அரசாங்கம் வகுக்கும் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் அரசாங்க ஊழியர் மீதும், கூட்டுறவுச் சங்க ஊழியர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்று எச்சரித்தார். யு. என். பி. செயற்குழு கூட்டத்தில் பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

யு. என். பி. தலைமைக் காரியாலயமான ஸ்ரீகோதாவில் இன்றிரவு செயற்குழு கூடி பல்வேறு விஷயங்கள் குறித்து ஆராய்ந்தது.

வாழ்க்கைச் செலவு மிக வேகமாக ஏறிக்கொண்டு இருப்பதால் மக்கள் அரசாங்கத்தின் மீது பெருத்த அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்றும் வாழ்க்கைச் செலவைக் குறைக்க உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த பொதுத்தேர்தலில் யு. என். பி. தோல்வி அடையவேண்டிவரும் நிலை ஏற்படுமென்றும் செயற்குழு அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பது மக்களின் அதிருப்தியை மேலும் பெருகுவதாக அமையுமென்றும், இந்த யோசனையைக் கை

[8-ம் பக்கம் பார்க்க]

# வியட்நாம் குண்டு வீச்சு நின்றாலும் சமரச பேச்சு நடைபெறுமா?

## வேர்ணன் தம்பதிகளுக்கு உருக்கமான பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மக்களிடமிருந்து கடைசித் தடவையாக கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிய, தாங்க முடியாத சோகத்துடன் பிரியாவிடை பெற்றார்கள் திரு. வேர்ணன் தம்பதிகள். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த புதிய அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் லெம்கடானும் கலங்கினார்.

நேற்று நண்பகல் வேர்ணன் தம்பதிகளுக்கு விமான நிலையத்தில் உருக்கமான பிரியாவிடை அளிக்கப்பட்டது. விமானநிலையச் சந்தியிலிருந்து இவர்கள் மோட்டார் வாகனங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள்.

உயர்தர அரசாங்க ஊழியர்களும், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களும், பெண்களும் நூற்றுக் கணக்காக திரண்டு வந்து இவர்களுக்கு மலர்மாலையும், செண்டுகளும் அளித்து மதிப்பை ஏற்க வழியனுப்பி வைத்தார்கள். ஒவ்வொருவருடனும் கைகுலுக்கி பிரியாவிடை பெறுகையில் திரு. வேர்ணன் பொங்கி வந்த கண்ணீரைத் தடுக்கமுடியாமல், கண்ணீர் கன்னத்தில் வழிந்தோட விடை பெற்றார். திருமதி வேர்ணன் தனது கைக்குட்டையினால் வாயைப் பொத்திய வண்ணம் அழுதார்.

இவர்கள் சென்ற இதே விமானத்தில் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், இராணுவ தளபதி திரு. மொரின் ஜெயவீரா, கடற்படைத் தளபதி திரு. ஹென்றிக்ஸ் ஆகியோரும் கொழும்பு சென்றார்கள்.

[ஈ. நி.]

## வடக்கும் தெற்கும் நிபந்தனை விதிக்கின்றன

வாஷிங்டன், நவ. 2

வட வியட்நாம் மீது குண்டு வீசுவதை அமெரிக்கா முற்றாக நிறுத்திவிட்டாலும் வியட்நாம் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு வியட் வியட்நாம் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் சமரசப் பேச்சு நடைபெறுவதற்கான அறிகுறிகளைக் காணவில்லை. வட வியட்நாமும், தென் வியட்நாமும் இருதரப்பட்ட கருத்துக் கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

[8ம் பக்கம் பார்க்க]

## பெரும் வெற்றி

ஹனோய், நவ. 2

வட வியட்நாம் மீது குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்தியது வியட்நாம் மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியென ஹனோய் வானொலி தெரிவித்தது.

## அமெரிக்க தூதுவரின் காருக்கு முட்டை வீசிய வழக்கு

### ரூபா 50 அபராதம் அல்லது 2 வார சிறை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகரின் காருக்கு கூழ் முட்டை வீசியது சம்பந்தமாக ஏ. சி. கந்தசாமி என்பவர் மீது குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட யாழ்ப்பாணம் மேலதிகநீதிபதி எதிரிக்கு 50 ரூபாய் அபராதம் அல்லது 2 வாரச் சிறைவாசம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் அவர்களின் கார் மீது 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ந் திகதி கூழ் முட்டை வீசி அவரை அவமானப்படுத்த முயன்றதாகவும் அவர் மீது பலாத்காரம் பிரயோகிக்க எத்தனித்ததாகவும் குற்றம் சாட்டி ஏ. சி. கந்தசாமி என்பவர் மீது யாழ்ப்பாணம் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

எதிரி சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி, புரக்டர் ஆபிரகாம் துரையப்பா ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் கே. வைகுந்தவாசன் ஆஜரானார். வழக்கை இன்ஸ்பெக்டர் டயஸ் நடத்தினார்.

இவ்வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாண மேல

[8ம் பக்கம்பார்க்க]

## மண்டைதீவு அல்லைப்பிட்டி கி. ச. தேர்தல்கள்

### மூவர் போட்டியின்றி தெரிவு

அல்லைப்பிட்டி, சனி

இவ்வருட இறுதிக்குள் நடைபெறவிருக்கும் மண்டைதீவு, அல்லைப்பிட்டிக் கிராமசபைத் தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்கள் தமது நியமனப் பத்திரங்களை இன்று மண்டைதீவு பழைய கிராம சபைக் கட்டிடத்தில் தாக்கல் செய்தனர். எட்டு வட்டாரங்களைக் கொண்ட மண்டைதீவுக் கிராமசபைக்கு 3ம் வட்டாரத்தில் திரு. நீ. பாலசிங்கம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 4ம் வட்டாரத்தில் தற்போதைய தலைவருடன் ஐவர் போட்டியிடுகின்றனர். 5 வட்டாரங்களைக் கொண்ட அல்லைப்பிட்டிக் கிராமசபைக்கு இரண்டு வட்டாரங்களில் இருவர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

1ம் வட்டாரம்: நா. தாமோதரம்பிள்ளை [தராசு] பொ. இருதாயம் (சேவல்)

2ம் வட்டாரம்: இராமு சுந்தரம் [தராசு], இ. சபாரத்தினம் [குடை], க. நடராஜா (சேவல்).

3ம் வட்டாரம்: நீக்கிலாப்பிள்ளை பாலசிங்கம் [போட்டியில்லை]

4ம் வட்டாரம்: வ. கணபதிப்பிள்ளை, [லாம்பு], அ. அந்திரேஸ்பிள்ளை [தராசு], சி. சபாரத்தினம் (கண்), யோ. மரியதாஸ் [சேவல்], செ. வேர்ஜூன் (குடை) க. கதிரவேலு [புத்தகம்) தற்போதைய தலைவர்).

5ம் வட்டாரம்: வே. நடராசா (புத்தகம்), வே. நீக்கிலாப்பிள்ளை [தராசு], கு. சிவரத்தினம் [குடை].

6ம் வட்டாரம்: க. அமிர்தலிங்கம் [தராசு], க. கயிலாசபிள்ளை [புத்தகம்] க. கனகசுந்தரம்(குடை] பொ. சொக்கலிங்கம் [சேவல்].

7ம் வட்டாரம்: நா. கணபதிப்பிள்ளை [வண்ணாத்திப் பூச்சி], நா. சண்முகநாதன் (பஸ்), வை. குமாரகுரு (தராசு].

8ம் வட்டாரம்: ... ராசா [கண்], ... [தராசு].

### அல்லைப்பிட்டி கிராமசபை

1ம் வட்டாரம்: இ. அருளம்பலம் (போட்டியில்லை]

2ம் வட்டாரம்: வே. அந்தோனி, யோ. அந்தோனிமுத்து, செ. தவவிநாயகம்.

3ம் வட்டாரம்: வ. சபாரத்தினம், சூ. செபஸ்தியாம்பிள்ளை, பொ. பொன்னுத்துரை.

4ம் வட்டாரம்: நா. சந்தையா, சி. கணபதிப்பிள்ளை

5ம்வட்டாரம்: சே. ஆறுமுகம் [போட்டியில்லை]

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க போர் நிறுத்த சமிக்ஞை

# ஹனோய், மாஸ்கோ, பீகிங் இன்னும் மௌனம்

## டிகால், பாப்பாண்டவர் வரவேற்பு

நியூயோர்க், நவ. 2

வடக்கு வியட்னாம் மீது நடத்தப்படும் சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி விடும்படி அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் அமெரிக்க துருப்புகளுக்கு உத்தரவிட்டு ஒரு நாளுக்கு மேலாகிவிட்டபோதிலும் இன்று காலைவரை வட வியட்னாமிடமிருந்தோ அல்லது சோவியத் யூனியன், கம்யூனிஸ்ட் சீனா போன்ற நாடுகளிலிருந்தோ எதுவிதமான உத்தியோகபூர்வமான அபிப்பிராயமும் வெளியிடப்படவில்லை.

வடவியட்னாம் மீது நடத்தப்படும் சகலவித குண்டு வீச்சுகளும் நிறுத்தப்பட வேண்டுமென்று அதிபர் ஜோன்சன் நேற்றுக் காலை இலங்கை நேரப்படி 6-30 மணிக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவை நேற்று மாலை 6-30 மணியிலிருந்து அமுலுக்கு வந்தது. அமெரிக்க அதிபரின் இந்த நடவடிக்கை பற்றி எதுவித மாற்றுவினைவு குறித்தும் எதிர் தரப்பிலிருந்து உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. என்றாலும் வடவியட்னாம் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில் இன்று காலையில் வடவியட்னாம் அரசாங்கம் மிக முக்கிய அறிவித்தல் ஒன்றை ரேடியோமூலம் விடுக்கும் என்றும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை தமது தடுப்புக்கு ஒரு வெற்றிதான் என்றும் கூறினார்.

அடுத்த வியாழனன்று பாரிஸில் நடைபெறவிருக்கும் அமைதிப் பேச்சுகளில் தேசிய விடுதலை இயக்கம் கட்டாயம் கலந்து கொள்ளும் என்று பாரிஸிலிருக்கும் வட வியட்னாம் தூதுக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

வியட் காங் கெரில்லா இயக்கமான இந்த ஸ்தாபனம் நேரடியாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதை தென் வியட்னாம் அரசாங்கம் எதிர்க்கிறது. இந்த ஸ்தாபனம் வட வியட்னாமுடன் இணைந்து கொள்ள வேண்டுமென்று தென்வியட்னாம் அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்காவின் நடவடிக்கையை எதிர்க்கவில்லையென்றும் ஆனால் இதே போன்ற வடவியட்னாமும் நடந்துகொள்கிறதா என்று அவதானிக்க போவதாகவும் தென்வியட்னாம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு டீன் ரஸ்க் ஜனாதிபதியின் நடவடிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில் தென்கிழக்கு ஆசியாவின் அமைதிக்கு இது முடிவாகி விடாது. அமைதிப் பேச்சுகளின்போது தீவிரமான விவாதங்கள் நடைபெறக் கூடும் என்றார்.

எதிர் தரப்பிலிருந்து எதுவித தகவலும் இல்லாதிருந்த போதிலும் உலகநாடுகள் பலவும் பொதுவாக அமெரிக்க ஜனாதிபதியின் நடவடிக்கைகளை உற்சாகமாக வரவேற்றுள்ளன.

### டிகால் கருத்து

தென் கிழக்காசியாவின் அமைதிக்கு இந்த நடவடிக்கை வழிவகுக்கும் என்று பிரெஞ்சு ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அதிபர் ஜோன்ஸனுக்கு இது சம்பந்தமாக கடிதமொன்றை அனுப்பி வைத்தார்.

பாப்பாண்டவர் தாம் பெரிதும் திருப்தியடைந்திருப்பதாக கூறயுள்ளார்.

கிழக்காசிய அமைதிக்கு தம்நாடு எதையும் செய்யக் காத்திருக்கிறது என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஸ்டுவர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

---

மாஸ்கோவில்

### விண்வெளி வீரருக்கு வரவேற்பு

மாஸ்கோ. நவ. 2

விண்வெளியில் நான்குநாட்கள் பிரயாணம் செய்துவிட்டு பூமிக்குத் திரும்பிய ரஷ்ய வீரர் கேணல் பெரிகுவாய் நேற்று மாஸ்கோவில் வீரர்களுக்கான மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்.

சோவியத் தலைவர்களான அதிபர் பொட்கார்னி, கம்யூனிஸ்ட் பொதுக் காரியதரிசி பிரெஸ்னேவ், பிரதமமந்திரி கோஸிஜின் ஆகியோர் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்ற ஒருவைபவத்தில் அவருக்கு லெனின் விருதும் வழங்கப்பட்டது.

---

### புதுடில்லியில் நேபாள மன்னர்

புதுடில்லி, நவ. 2

நேபாளமன்னர் மகேந்திராவும் மகாராணியும் நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தனர். அவர்களை குடியரசுத்தலைவர் டாக்டர் சாகிர்ஹுசேனும் பிரதமந்திரி திருமதி இந்திராகாந்தியும் பிரமுகர்களும் வரவேற்றனர்.

நேற்று அவர்கள் ராஷ்டிரபதி பவனில் தங்கினார்கள்.

---

### பந்தோபஸ்து சபையின் புதிய உறுப்பினர்

நியூயோர்க் நவ. 2

ஐ. நா. பந்தோபஸ்து சபையில் தற்காலிக அங்கத்தவர்களாகக் ஹங்கேரி, நேபாளம், ஸ்பெயின், பராகுவே, அல்ஜீரியா, செனகல் ஆகிய நாடுகள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே தற்காலிக அங்கத்துவம் வகித்த கனடா, பிரேஸில், எதியோப்பியா இந்தியா, டென்மார்க் ஆகிய நாடுகளின் இடத்திற்குமேற்குறிப்பிட்ட புதிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

---

## தி. மு. க. வுக்கு மேலும் 8 பேர்

சென்னை, நவ. 2

சென்னை மாநகரசபைக்கு அரிஜன மக்களின் பிரதிநிதித்துவம் வகிப்பதற்காக எட்டு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த எட்டு அரிஜன அங்கத்தவர்களும் சேர்ந்தால் மாநகரசபையில் தி. மு. க. உறுப்பினர்களின் தொகை 62 ஆக கூடும்.

பழைய மாநகரசபையில் தி. மு. க. வுக்கு 50 அங்கத்தவர்கள் இருந்தனர். 4 அரிஜன அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டதால் தி. மு. க. வுக்கு 54 அங்கத்தவர்கள் இருந்தனர்.

### தண்டனை

மாநகரசபை தேர்தலில் கள்ளவோட்டு போட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு இன்று தண்டனை விதிக்கப்பட்டது. ஆறு பெண்கள் உட்பட 41 பேர் கள்ளவோட்டு போட முயன்றதாக பிடிபட்டனர். ஒரு நபருக்கு இன்று 3 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

### அண்ணா இருந்திருந்தால்

காமராஜர் தேர்தலில் கலந்துகொண்டு பிரசாரம் செய்ததால்தான் காங்கிரசுக்கு 13 அங்கத்தவர்கள் கூடியிருக்கிறார்கள். இது போல் அண்ணாவும் இருந்து பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தால் 15 பேர் தி. மு. க. வுக்கு கூடியிருப்பார்கள் என்று ஈ. வே. ரா. பெரியார் கூறியிருக்கிறார்.

15-ம் வட்டாரத்தில் வெற்றிபெற்ற காங்கிரஸ் உறுப்பினருக்கு எதிராக ஆட்சேபமனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

---

## அரபுஎல்லைக்குள் மீண்டும் இஸ்ரேல் ஊடுருவல்

### பந்தோபஸ்து சபை ஆராய்கிறது

நியூயோர்க், நவ. 2

ஐக்கிய அரபுக் குடியரசுக்குள் கடந்த வியாழனன்று வெகுதூரம் ஊடுருவல் செய்து பொதுமக்கள் வாழும் இலக்குகள் மீது குண்டுவீச்சு நடத்தியதாக இஸ்ரேல் மீது குற்றஞ்சாட்டி ஐக்கிய அரபுக்குடியரசு தெரிவித்துள்ள புகார் பற்றி ஆராய இன்று ஐ. நா. பந்தோபஸ்துசபை கூடவிருக்கிறது.

வேண்டுமென்றே ஊடுருவல் மேற்கொண்டு ஒரு மின்சார நிலையத்தையும், ஒரு பாலத்தையும் இஸ்ரேல் படைகள் நாசஞ்செய்திருப்பதாகவும், ராணுவ இலக்கு அல்லாத கரும்பு சாகுபடியாகும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் குண்டு வீசி நாசம் விளைவித்திருப்பதாகவும் அரபுத் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று ஐக்கிய அரபுக் குடியரசுப் படைகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவல்செய்ததாக இஸ்ரேலும் ஒரு புகாரைத் தெரிவித்துள்ளது.

---

பிரிட்டனில்

## பிரபுக்கள் சபை உரிமைகள் மாறும்

### காமன்ஸ் சபையில் வெள்ளை அறிக்கை தாக்கல்

லண்டன், நவ. 2

பிரிட்டனில் பிரபுக்கள் சபை சபையின் உரிமைகள் விஷயத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான ஒரு வெள்ளை அறிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் காமன்ஸ்சபையில் தாக்கல் செய்திருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில் மசோதாவொன்று விரைவில் சபையில் தாக்கல் செய்யப்படும்.

இந்த மசோதாவின்படி தற்போது பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் அனுபவிக்கும் பாரம்பரிய உரிமைகள் சில மாற்றப்படும். மரபுரிமை மூலம் பிரபுக்கள் சபையில் அங்கத்தவர்களாய் இருக்கும் பிரபுக்கள் தமது ஆயுட்காலம் முழுவதும் அங்கத்தவராக இருக்க அனுமதிக்கப்படுவர். ஆனால் வாக்களிக்கும் உரிமைகள் இவர்களுக்கு இருக்காது.

---

### ஒரிஸ்ஸாவில் பலியானவர் தொகை 56

புதுடில்லி, நவ. 2

ஒரிஸ்ஸாவில் ஏற்பட்ட சூறாவளிக் கொடுமையில் இறந்தவர்களின்தொகை 56 ஆக அதிகரித்துள்ளது. ஒரிஸாவில் ஏற்பட்டுள்ள அழிவைமதிப்பிடுவதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. கஞ்சம்பகுதியில் அழிவு ஒரு கோடிக்குமேலிருக்கும் என்று மத்திய மந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

### கேரளா பற்றிய மத்திய அரசின் கொள்கை

புதுடில்லி, நவ. 2

கேரள அரசின் சாஸனத்தின் ஷரத்துக்களை மீறும் நடவடிக்கையில் இறங்கினால் அல்லாமல் மத்திய அரசு கேரள அரசாங்கத்தின் நிர்வாகத்தில் குறுக்கிடாது என்று பார்லிமென்டில் உதவி பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

---

### வேலைநிறுத்தம் பற்றி ஆராய்வார்

வெள்ளவத்தை, சனி

நவம்பர் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தில் இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தினர் கலந்து கொள்வதா இல்லையா என்ற இறுதிமுடிவை எடுப்பதற்காக வருகிற 9-ம் திகதி இவர்களது விசேட பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. ரூபா 40 அடிப்படைச் சம்பள உயர்வு கோரி தபால் ஊழியர்கள் இம்மாதம் வேலை நிறுத்தம் செய்யவிருப்பது வாசகர்கள் அறிந்ததே.

---

### எல்லாம் இவரே

சுழிபுரம், சனி

வைத்தியசாலையிலுள்ள ஒரேயொரு அப்போதிக்கரியே நோயாளரைப்பார்க்கும் வேலையையும், மருந்து கலக்கும் வேலையையும் செய்துவருகிறாராம். இது தொல்புரம் மாஜுவெட்டி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறுகிறது.

இங்கு மருந்து கலக்கும் ஊழியர் இல்லாமலிருப்பதால் அப்போதிக்கரியே மருந்தையும் கலந்துகொடுக்கவேண்டியுள்ளது. இங்கிருந்த மருந்து கலப்பாளரை மாற்றஞ் செய்து சுகாதாரப் பகுதி அவ்விடத்தைக் காலியாகவே விட்டுவிட்டதாம். நோயாளரைப் பார்த்த பின்னரே அப்போதிக்கரி மருந்தையும் கலக்க வேண்டியிருப்பதால் நோயாளர் அதிக நேரம் அங்கு தங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

'நான்' என்ற அகந்தையை ஒழிப்பது, மிகமிகப் பணிவோடு நடந்துகொள்வது, அதிகமான பொறுமை காட்டுவது, தெளிவான நம்பிக்கையோடிருப்பது —இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகமாகும். சத்தியாக்கிரகத்துக்குரிய சன்மானம் சத்தியாக்கிரகமே. —மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் ஐப்பசிமாதம் 18-ந் திகதி
[3-11-68]


## ஒற்றுமைப் பேச்சுகள்

மட்டக்களப்பிலே இன்று கூடும் தமிழரசுக் கட்சிச் செயற்குழு கமிட்டி, ஈழத்தமிழரின் இன்றைய பல பிரச்னைகளை ஆராய்வதுடன், இவற்றைத் தீர்ப்பதற்காக, மற்றத் தமிழ்க்கட்சிகளுடன் ஒத்துழைப்பது பற்றியும் ஆலோசிக்கும் என்றும் கூறப்படுகிறது.

ஈழத் தமிழரின் இன்றைய நிலைமை எவ்வகையிலும் மகிழ்ச்சியோ, நம்பிக்கையோ அளிப்பதாக இல்லை. பல ஆண்டுகளுக்கு முன் இருந்ததுடன் ஒப்பிடுகையில் நிலைமை மிக மோசமாகியுள்ளதை யாரும் சுலபமாக அறியலாம். இதற்கான பொறுப்பு எல்லாத் தமிழ்த் தலைவர்களையுமே சேரும்.

தமிழ்த் தலைவர்களிடையே அதிருஷ்டவச [illegible] ...யோ, நிம்மதியோ கொள்ளமுடியாது.

இவ்வளவு நெருக்கடியான சமயத்திலும், தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லாமல் பிளவுபட்டு இருப்பதால் தமிழ்ச் சமூகம் மேலும் பலவீனமடைவதுடன், மற்றவர்கள் தமிழரைச் சற்றும் மதிக்காமல், [illegible] நிலைமை உருவாகி உள்ளதைப் பார்க்கின்றோம். [illegible] பத்திரிகைகள், தமிழரைப் பற்றி [illegible] வகுப்புத் துவேஷமான முறையில் செய்துவரும் பிரசாரங்களைப் பார்த்தால், அதைத் தட்டிக் கேட்க ஆளில்லாததையும் தமிழ்த் தலைவர்கள் கவனித்தால், இந்நாட்டுத் தமிழரின் எதிர்காலம் பற்றி அவர்கள் [illegible] கவலைப்பட வேண்டியிருக்கும். [illegible]

### அமெரிக்க அதிபர் தேர்தல்

[illegible]

# சமாதானப் பேச்சுக்... உருப்படியாக முன்னே...

## குண்டுவீச்சை நிறுத்தியதற்கு ஜனாதிபதி ஜோன்சன் விளக்கம்

"தென்வியட்னும் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை எமக்குக் கிடையாது. அதை அவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதற்கு இடையூறாக அமெரிக்கா ஒருபோதும் நிற்கப்போவதில்லை." அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் இவ்வாறு கூறியிருக்கிறார். கடந்த வெள்ளியன்று வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்துவதற்கு உத்தரவிட்ட அதிபர் தமது நடவடிக்கைகளுக்கான காரணங்களை டெலிவிஷன் மூலம் அமெரிக்க மக்களுக்கு விளக்கினர். அந்த விளக்கத்தில் ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது.

சில காலமாக வடவியட்நாமுக்கும் நமக்கும் இடையில் ஏற்பட்டுவந்த நெருக்கடிகள் தளர்ச்சியடையக் கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருவதை அறிவித்தேன். [illegible] ...வித்துவிட்டேன். அரசாங்கம் இத்தகைய முடிவை இப்பொழுது அறிவித்திருப்பதற்கான காரணத்தையும் அவர்களுக்கு விளக்கியுருக்கிறேன். [illegible] அவர்களையும் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்று கொள்ளவேண்டாம் என்று வற்புறுத்த விரும்புகிறேன். [illegible]

காட்டியிருக்கிறோம். நகரங்கள் குண்டு வீச்சுக்களினால் தாக்குறவும் இராணுவ சூனிய மண்டலம் தாக்குதல்களுக்கு உள்ளாகவும் தொடர்ந்து சூழ்நிலை இருக்குமானால் பேச்சுகள் பிரயோசனப்படப்போவதில்லை.

[illegible]

பாரீஸ் நகரில் நவம்பர் மாதம் 6-ம் திகதி புதன்கிழமையன்று மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும். [illegible]

# 'அந்நியரின் மும்முனைத்தாக்... அஞ்சாது நின்று போரிட்...

## 10 ஆயிரத்துக்கு அதிகமானேர் கூடி பண்டாரவன்னியனுக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, சனி [illegible] ...அடங்காப்பற்றின் காவலனாக அன்னைபூமியாம் வன்னி நாட்டின் சுதந்திரத்தைக் கட்டிக் காத்தவரும் தனது இறுதி மூச்சுவரை அந்நிய [illegible] ...டிக் சுதந்திரமாக எவருக்கும் அடங்காது வாழ்ந்த தன் காரணத்தாலேயே 'அடங்காப்பற்று' என்ற பழம்பெரும் சிறப்புப் பெயரை நமது வன்னிநாடு [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இனிய மணிகளே!

பரிசுப்போட்டியில்—3 ல் பரிசு பெற்ற கட்டுரை பிரசுரமாகியுள்ளது. அடுத்த போட்டி எப்போது எப்போது என்று நச்சரித்து பலரும் கடிதம் எழுதியுள்ளார்கள். ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மாணவருக்குமென்றும் (இரு பிரிவு) கட்டுரைப் போட்டிகள் நடத்துகிறோமல்லவா? போட்டி விதிகளை நன்குபடித்து நீங்களும் போட்டியில் பங்குபற்றலாமல்லவா!

'ராஜா வீட்டுப்பிள்ளை'—தொடர் நவீனம் முற்றுப் பெற்றுவிட்டது.

புதிய அம்சங்கள் ஏதாவது சேர்க்கலாமா? எழுதுங்கள்.

—மாமா

மனித குலத்துக்கு

# மகாத்மாவின் சேவை!

— கி. ஜேம்ஸ் கூஞ்ஞ

உலகம் போற்றும் உத்தமர் காந்தி. அன்பின் ஆதாரமாய், பண்பின் பிறப்பிடமாய், இரக்கத்தின் இருப்பிடமாய், சேவையின் செம்மலாய், சமரசத்தின் பக்கத்துணைவராய், இப்பாரில் உதித்த பரமஞானி. தன்னுயிரையே தாய் நாட்டிற்காகத் தந்துதவிய தியாகி. நிறவெறியர்களின் மூர்க்கத்தனங்களுக்கு முட்டுக்கட்டை போட்ட முடிசூடா மன்னன். தீண்டாமைக்குச் சாவுமணி அடித்த சக்கரவர்த்தி!

தென் ஆபிரிக்காவில் நிறவெறி தலைவிரித்தாடியது. இந்திய மக்கள் மாக்களாக மதிக்கப்பட்டனர். அங்கு சென்ற காந்தி அடிகளுக்கு அதைப்பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. உரிமைகளுக்காக யாவரும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டுமென்று ஊரெங்கும் பிரசாரம் செய்தார். அதற்காக 1894-ல் நேட்டால் இந்தியக் காங்கிரசைத் தோற்றுவித்தார்.

### நர்ஸ் வேலை செய்தார்

அதே வேளையில் வறுமையால் வாடுபவர்களுக்கும், பிணியினால் பரதவிக்கிறவர்களுக்கும் கைமாறு கருதாமல் கணக்கற்ற உதவிகள் புரிந்துவந்தார். குஷ்டரோகத்தினால் வருந்திய முடவனொருவனின் காயங்களைத் தன் கையாலேயே கழுவி மருந்திட்டார். வைத்தியசாலையொன்றில் ஊதியம் பெறாது [நர்ஸ்] வேலை செய்துவந்தார். அன்பு உளம்கொண்ட காந்தியடிகள் இருபத்துநாலு பேர் கொண்ட சிறுமருந்துப் படை ஒன்றை நிறுவி அவர்களுக்கு அருந்தொண்டாற்றினார். இவ்வாறு ஏழைகளின் ஏகதோழனாய் விளங்கினார், காந்தியண்ணல்.

தென் ஆபிரிக்காவில் வாழ்ந்த இந்திய மக்களுக்காக எட்டு வருடங்கள் அங்கு அவர் அறப்போர் நடத்தி அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தினார். [1905-1914 வரை] மூன்று சத்தியாக்கிரகப் போர்களில் முழுமூச்சுடன் புகுந்து முதன்மையான வெற்றிகளுமடைந்தார். சிறை வாழ்விலும் அங்கு சிறிது அனுபவம் கண்டார்.

### தொழிலாளர் தொண்டன்

தாயகம் திரும்பிய தவப்புதல்வன் காந்தி தாய் நாட்டுத் தொண்டைத் தொடர்ந்து நடத்திவந்தார். உண்மையைக் கடைப்பிடித்த உறுதியுடன் போராடும் சத்தியாக்கிரக ஆச்சிரமத்தை அமைத்தார். ஊழியர்களின் உரிமைகளுக்கு உலைவைக்கும் முதலாளிமாரை முறியடிக்க முற்பட்டார் தொழிலாளர் தொண்டரான காந்தி.

பெரும்போரில் உதவி புரிந்தால் விடுதலை அளிப்பது உறுதி என்று ஆணையிட்டனர் அரசினர். நாட்டின் விடுதலையையே விருதுவாகக்கொண்ட வீரன் காந்தியும் கணக்கற்ற மக்களைப் படைக்குத் திரட்டி உதவினார். ஆனால் அளித்த வாக்குறுதியின் வழி நிற்கவில்லை அவர்கள். மனமுடைந்த காந்தி மக்கள் மத்தியில் விடுதலை வேட்கையை விதைக்க ஆரம்பித்தார். சத்திய நெறி நின்று சகலத்தையும் ஆக்க முடியுமென்று அறை கூவினார். ஆயினும் அமைதியில் அறப்போர் நடத்தும் அண்ணல்

## பரிசு கட்டுரை

காந்தியைக் கலவரங்களுக்கெல்லாம் காரணகர்த்தா என்று கண்மூடித்தனமாக கைது செய்து ஆறு ஆண்டுகள் சிறைச் சீவியம் என்று தீர்ப்பிட்டனர். குடலில் செய்த ஒரு சத்திர சிகிச்சையின் மூலம் இவரது உடல் நலம் குன்றிப்போனது. இதைக்கண்ட அரசினர் இவருக்கு இரண்டு வருடங்களில் விடுதலை அளித்தனர்.

### அறப்போர் !

மீண்டும் அறப்போர் ஆரம்பமாகியது. ஒருமுறை (12-3-1930) இருநூறு மைல்கள் காலால் கடுக்க நடந்தார். மீண்டும் பலமுறை சிறை சென்றும், சத்தியாக்கிரகப்போர் புரிந்தும், உண்ணாவிரதமிருந்தும் விடுதலைக்காக உழைத்தார். இறுதியில் சத்தியம் ஜெயித்தது. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் முதுமொழிக்கேற்ப, இந்தியா 1947ம் ஆண்டு ஆவணி 15ம் நாள் விடுதலையடைந்து வீரமுரசொலித்தது. 'கத்தியின்றி இரத்தமின்றி' இந்தியா சுதந்திரமடைந்ததைக் கண்டு அகில உலகமே அதிசயித்தது. அதற்கு அடிகோலியவர் யாரென்று எமக்குச் சொல்லாமலே விளங்கும்.

### தீண்டாமைக்கு சாவுமணி

இவைமட்டுமா [illegible] களில் தொண்டுகள்! [illegible] எம்மவரிடையே மன்றும் இருக்கும் தீண்டாமை என்னும் தீய பழக்கத்திற்கு தீக் கொளுவிவைத்தார். தீண்டாதார் ஒருவரின் பாண்டத்தைக் கழுவக் கஸ்தூரிபாய் மறுத்தபோது அடிகளார் அதைப் பொறுக்கவில்லை. அவரது சபர்மதி ஆச்சிரமத்தில் தீண்டாதாரை அனுமதித்ததால் விளைந்த இன்னல்களைப் பொருட்படுத்தவில்லை. தீண்டாதாருக்கு ஹரிஜனங்கள் என்று பெயரிட்டார். டில்லி பம்பாய் போன்ற பட்டணங்களில் அவர்களுக்கும் ஆலயங்களைத் திறந்து விட்டார். தீண்டாதாரின் தனித்தொகுதிமுறையை எதிர்த்து உண்ணாவிரதமிருந்தார். சேரிகளுக்குச் சென்று அவர்கள் சுகாதாரவாழ்வில் வாழ வழிவகுத்தார். சேரிகளில் அடிக்கடி தங்கினார். இவையெல்லாம் அவரது அன்புள்ளத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இந்திய நாட்டில் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக இறுதி மூச்சுவரை உழைத்தார். ஒற்றுமையை உணர்த்தும் உணர்ச்சி மிக்க கட்டுரைகளை தனது "யங் இந்தியா" பத்திரிகையில் பிரசுரித்தார். பலமுறை உண்ணாவிரதம் இருந்தார் அவர். பெண்டிர் முன்னேற்றத்திற்காக பெரிதும் உழைத்தார். விடுதலைப் போர்புரிய பெண்களுக்கும் பெரிய வாய்ப்பளித்தார். பருவம் வரும் முன்னமே மங்கையரை மணமுடித்து வைக்கும் மடமைத்தனத்தைக் கண்டித்தார். ஆலயங்களில் விலைமகளிர் பணியாற்றல் விரும்பத்தகாதது, என்றார். விலைமகளிரைக் குலமகளிராக்க முனைந்தார்.

### மதுவிலக்கும் காந்தியும்

மதுவிலக்கைச் சட்டமாக்கியது மகாத்மா காந்தியடிகளே. தொண்டர் படையைத் திரட்டி குடிவெறியர்களையெல்லாம் கைது செய்யும்படி ஏவினார். இவ்வாறு வெற்றிப்பாதையிலே வீறுநடைபோட்ட இத்திட்டம் 1937-ம் ஆண்டு சட்டமாகியது.

ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தை வளமாக்க கதர்இயக்கத்தையும் சுதேசி இயக்கத்தையும் உருவாக்கினார். கதர் என்றால் காந்தியடிகளுக்கு உயிர், உடல் நலம் குன்றிய நாட்களிலும் நூல் நூற்கத் தவறியதில்லை' அவர் இராட்டினத்திற்கு இந்தியத் தேசியக் கொடியிலேகூட இடமளித்து விட்டாரே காந்தியடிகள். இக் 'கதர் இயக்கம்' இன்று கோடிக்கணக்கான மக்களுக்கு உணவும் உடையும் அளிக்கின்றது.

ஆனால் அண்ணலைப் போன்ற தன்னலமற்றவரை இவ்வுலகம் விட்டுவைப்பதில்லையே. இருமுறை இரு குண்டுகள் இந்த குற்றமற்ற உயிரைக் குடிக்கக் குறிபார்த்தன. இரண்டிலிருந்தும் இவர் தப்பிவிட்டது இந்தியநாட்டின் தவப்பலனோ என்னவோ? ஆனால் அவரது இறுதி இலட்சியமாகிய இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்துக் கொண்டிருக்கும் போது கோட்சே என்னும் கொலைபாதகனின் குண்டுக்கு இரையானார். அச் செய்திகேட்டு அகில உலகமே அதிர்ந்தது. இன்று அவர் எம் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரது சத்தியத்தின் சங்கநாதம் இந்த உலகம் உள்ளளவும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

★ தொடர் நவீனம்

# ராஜா வீட்டுப் பிள்ளை

—ராமா ராஜகோபால்

[7]

இன்ஸ்பெக்டர் சுந்தரேசனாரைப் பார்த்துச் சொன்னார்:

"ஐந்து நிமிடம்கூட இருக்காது! கறுப்புக்காற் சட்டையும், வெள்ளை டெர்லின் ஷேர்ட்டும் அணிந்துகொண்டிருந்த சிறுவன் ஹோக்பேக் கட்டடத்துக்கு அருகாமையில் காரொன்றினால் மோதுண்டு தலையில் பலத்த காயத்துக்குள்ளாகி ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளோம். பன்னிரண்டு வயது இருக்கும்."

சுந்தரேசனார் தவித்தார்.

அவர் அப்படித் தவித்ததற்குக் காரணமுமில்லாமலில்லை!

இன்ஸ்பெக்டர் சொன்ன தகவலின்படி விபத்துக்குள்ளானது தன் மகன் ரவி தான் என்று அவர் உள்ளம் கத்திக் கொண்டிருந்தது!

"ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும் போது சிறுவனுக்கு நினைவில்லை. அதனால் சிறுவனைப்பற்றிய எவ்வித தகவலும் எடுக்க முடியவில்லை"- இன்ஸ்பெக்டர் சொன்னார்.

சுந்தரேசனாரால் தொடர்ந்தும் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை!

இன்ஸ்பெக்டரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, காரில் வந்து ஏறிக் கொண்டார்.

கார் பறந்தது!

ஜெனரல் ஆஸ்பத்திரிமுன் நின்ற காரிலிருந்து பரபரப்புடன் இறங்கிய சுந்தரேசனார் விறுவிறு என்று விபத்துக்குள்ளானவர்களை அனுமதித்திருக்கும் வார்ட்டுக்குள் நுழைந்தார்!

ஒவ்வொரு கட்டிலாகப் பார்த்துக் கொண்டு சென்றார்!

நடந்து கொண்டு சென்றவர் —

(7-ம் பக்கம் பார்க்க)

# மலேசியாவில் இரு மாதம்!

—வல்வெட்டி சு. குலேந்திரராசா

மலேசியாவில் நான் தங்கியிருந்த சமயத்தில் என் கண்களை பரிசோதனை செய்வதற்காக மலேசிய கண்வைத்திய நிபுணர் ஒருவரிடம் சென்றேனென்று கடந்தவாரத்தில் குறிப்பிட்டிருந்தேனல்லவா!

இலங்கையைப்பற்றி அவர் எவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் வைத்திருக்கிறாரென்பதை அவர் என்னுடன் பேசியதிலிருந்து அறியக் கூடியதாகவிருந்தது.

"இலங்கையில் தானே திறமையும், ஆற்றலுமிக்க டாக்டர்கள் இருக்கிறார்கள். அங்கேயே உங்கள் கண்களைப் பரிசோதிப்பது நல்லது" என்று அவர் கூறினார்.

நம் நாட்டைப்பற்றி அவர் ஒரேயடியாகவே புகழத் தொடங்கிவிட்டார். என் நாட்டைப்பற்றி எனக்குத் தெரியாத தகவல்கள் பலவற்றை அவர் என்னிடம் சொன்னார். இலங்கையைப் பற்றி இவ்வளவுதூரம் அறிந்து வைத்திருக்கிறாரே என்று வியந்தேன்.

மலேசிய ஆட்சிமன்றத்துக்குப் போனேன். வெளிநாட்டுக்காரர்களைக் கவரக்கூடிய விதத்தில் அழகாக அமைத்துவைத்திருக்கிறார்கள் ஆட்சிமன்றத்தை! 25 அடுக்குக்கொண்ட கட்டடம் இது! இங்கு வந்த பிறகுகூட மலேசியாவை நினைத்ததும் இந்த வானைத்தொடும் ஆட்சிமன்றம்தான் நினைவுக்கு வருகிறது.

மலேசியா மிருகக்காட்சிசாலை, நூதனசாலை ஆகியவற்றுக்கும் போனேன். இலங்கையிலுள்ள தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையை நான் பார்த்ததால் மலேசிய மிருகக்காட்சிச்சாலை அவ்வளவு ஒன்றும் புதுமையாகத் தெரியவில்லை. இலங்கை மிருகக்காட்சிச்சாலை முன்னணியில் நிற்கிறது என்றே சொல்லலாம்.

'டெலிவிஷன்' வானொலிக் கடைகளுக்குச் சென்றேன். இவைகளைப்பார்க்கும்போது ஒரு பொருட்காட்சிச்சாலை போலவே தோன்றியது. எத்தனையோ வகையான, அழகான, மனதைக்கவரக்கூடிய பலதரப்பட்ட வானொலி, 'டெலிவிஷன்' பெட்டிகளைக் காணலாம். எல்லாவற்றையுமே வாங்கவேண்டும்போல் தோன்றும்.

நான் மலேசியாவில் தங்கியிருந்த 2 மாதங்களும் என் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத பொன்னாட்கள். மலேசியாவைவிட்டு வரவே எனக்கு விருப்பமில்லை.

போகும்போது கப்பலில் சென்ற நான் வரும்போது இலங்கைக்கு விமானத்தில் வந்து சேர்ந்தேன். 125பேர் இருக்கக்கூடிய எயார்சிலோன் விமானத்தில் கோலாலம்பூர் விமானநிலையத்திலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையம் வந்தடைந்தேன் இரண்டரை மணி நேரத்தில் இலங்கைக்கு வந்து விட்டேனே!

[முற்றும்]

## இனிப்புக்காரன்!

வட்ட வட்டு இனிப்புண்டு
வாங்க, வா தம்பி!
நட்ட மில்லை லாபமுண்டு
நாடிவா தம்பி!

o

வண்ண வண்ண இனிப்புண்டு
வாங்க வா தம்பி!
உண்ண உண்ண உவகைதரும்
ஓடி வா தம்பி!

o

இரண்டு சதம் நாவினிப்பு
இங்கே வா தம்பி!
திரண்டு வரும் ஈக்களில்லை
தேடி வா தம்பி!

—கருணையோகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம் 'நொக்கவுட்'

# கடற்படை கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் சகல விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் "நொக்கவுட்" உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகத்திற்கும், காரைநகர் கடற்படைக் கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கடற்படை கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டியினரும் நன்றாக விளையாடினர். போட்டி தொடங்கி 15 நிமிடங்களின்பின் கடற்படைக் கோஷ்டியினர் முதலாவது கோலை மிக சாதுரியமாகப் போட்டனர். இடைவேளைக்கு சற்று முன் அரியாலைக் கோஷ்டியினர் தமக்குக் கிடைத்த 'பெனல்டிக்' மூலம் ஒரு கோலைப் போட்டனர். இக்கோலை அக்கோஷ்டியின் வலது கரை வீரர் மகாலிங்கம் அடித்தார். இடைவேளையின்போது இரு கோஷ்டியினரும் சரிசமமாக 1-1 கோலைப் பெற்றனர்.

இடைவேளையின்பின் அரியாலைக் கோஷ்டியினர் சோர்வுற்ற நிலையில் நிலைகுலைந்து விளையாட முற்பட்டதால் கடற்படைக் கோஷ்டியினர் மிக இலகுவாக ஒன்றின்பின் ஒன்றாக நாலு கோல்களைப் போட்டனர். ஆட்ட முடிவில் கடற்படைக் கோஷ்டி அரியாலைக் கோஷ்டியை 5-1 கோல்களால் தோற்கடித்தது. கடற்படைக் கோஷ்டியின் சார்பில் எம். எம். கதிர் 3 கோல்களையும், பி. ஏ. டி. அலோசியஸ் 2 கோல்களையும் போட்டனர். யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சிவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [தே. நி.]

## யாழ்ப்பாணத்துடன் திருமலை மோதும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே வருகிற 4-ந் திகதி உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறும். திருமலைக்கோஷ்டி இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினரால் கடந்த வருடம் நடாத்தப்பட்ட போட்டியில் சாம்பியனானது என்பது தெரிந்ததே.

[ந. நி.]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 3—11—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நமஹாஞ்சலி, 6-35 வைசநற்சிந்தனை, 6-40 சுத்தேசலிக்கநற்சிந்தனை, 6-45 ஜதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடியன்பாடுவாரப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 பாலனம், 7-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 7-30 பாட்டு — சரோஜினி தனபாலசிங்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-15 தேர்ந்த இசை.

## ராஜாவீட்டு ... ...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

திடீரென்று ஒரு கட்டிலுக்கு முன்னால் நின்றுவிட்டார்!

தலையில் பெரிய கட்டுடன் மயங்கிய நிலையில் அந்தக் கட்டிலில் ஆடாமல் அசையாமல் படுத்திருந்த அந்தச் சிறிய உருவம் அவரை அவ்விடத்தில் அசந்துபோய் நிற்கச் செய்துவிட்டது!

"ஐயோ ரவி" என்று அவருக்குக் கத்த வேண்டும் போலிருந்தது!

ஆனால்—

அது ஆஸ்பத்திரி என்பதை மட்டும் அவரால் மறக்க முடியவில்லை!

ரவியின் நிலையைப் பார்த்ததும் அவருக்கு அழுகை அழுகையாக வந்தது!

"ரவி ... ரவி ..." என்று மெதுவாக அழைத்தார்.

பாவம், ரவி இன்னும் மயக்க நிலையிலேயே இருந்தான்!

அவனைப் பார்த்துக் கொண்டே எவ்வளவுநேரம் அந்தக் கட்டிலில் ரவியின் கையைப் பிடித்துக் கொண்டு சுந்தரேசனார் இருந்தாரோ தெரியாது.

இரு மணி நேரம் கழிந்துவிட்டது!

ரவி மெல்லமாகக் கண்களைத் திறந்தான்—

தன் முன்னாலிருந்த தகப்பனாரை "அப்பா" என்று கூப்பிட்டான்.

சிறிது நேரத்துக்கு முன்னர் கவலையால் துடிதுடித்துக் கொண்டிருந்த சுந்தரேசனாருக்கு ரவி 'அப்பா' என்று கூப்பிட்டது பாலை வார்த்தது போலிருந்தது!

○

ரவி ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து மாதம் ஒன்றாகிவிட்டது.

இப்போது பழைய ரவி யாகிவிட்டான். ஓடியாடித் திரிகிறான்! அப்பாவுக்குப் பிடித்த 'ராஜாவீட்டுப் பிள்ளை'யாக நடந்து கொள்கிறான்!

சுந்தரேசனாரும் தன் மகனின் அன்பால் எல்லாக் கவலையையும் மறந்து எந்நேரமும் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

[முற்றும்]

## தமிழரின் சொத்துக்கள் பற்றி நீதிபதி

உடுப்பிட்டி, சனி

"பண்ணும், இசையும் தமிழரின் பாரம்பரிய சொத்துக்கள். இவற்றைநாம் போற்றிக்காக்கவேண்டும். சமய வாழ்க்கை எம்மை நல்வழிப் படுத்தும். இளம் சந்ததியினருக்குச் சிறந்த கல்வியைப் போதிப்பதுடன் நின்றுவிடக்கூடாது. அவர்களை நல்லபாதையில் நடத்திச் செல்வதே எமது முக்கிய கடமையாகும். ஒவ்வொரு வீடுதோறும் இசைமழ தேவாரங்களைப் பண்ணுடன் ஓதவேண்டும். இப்பழைய சொத்துக்களை நாம் அழிய விடக்கூடாது."

இவ்வாறு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திருமு. சண்முகலிங்கம் இக்கத்தைச் சேர்ந்த செல்வி யோகாம்பிகை செல்லையாவின் அரங்கேற்ற விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். பொலிகண்டி கந்தவன ஆலயமுன்றலில் இவ் அரங்கேற்றம் நிகழ்ந்தது.

அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் சங்கீத பூஷணமும், இராமநாதன் கல்லூரி ஆசிரியையுமான செல்வி யோகாம்பிகை செல்லையா தேவாரங்களையும் முருகன் நாமாவளிகளையும் பண்ணுடன் பாடினார்.

# சிவாஜியின் மகளுக்கு நாளை திருமணம்

## மணப்பெண்ணை மணமகன் பார்க்கவில்லை

சென்னை நவ. 2

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகள் சாந்தா நாயகிக்கு (வயது 17) நாளை நாகபட்டினத்தில் சிறப்பாக திருமணம் நடைபெறவிருக்கிறது. மாப்பிள்ளை ஒரு எஞ்ஜினியர் பெயர் நாராயணசாமி.

சிவாஜிகணேசனின் சொந்தக்காரரான நாராயணசாமி (வயது 25) தன் வாழ்நாளில் இன்னுமொருதடவையாவது மணமகளைப் பார்க்கவில்லையென்றும், தன் மாமனான சிவாஜியுடன் இருதடவை மட்டுமே சந்தித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இத்திருமணம் பெற்றோர்கள் பேசி ஒழுங்கு செய்த திருமணமென்றும் நாகபட்டினத்தில் சொந்த நிலத்தில் விவசாயப்பண்ணை அமைத்து நிர்வகித்துவருவதாகவும் மாப்பிள்ளை தெரிவித்தார்.

சிவாஜி நடித்த முதல் படமான 'பராசக்தியை' தனது பத்து வயதில் பார்த்ததாகவும் சிவாஜி நடித்த எல்லாப்படங்களையும் தான் பார்க்கவில்லையென்றும் மாப்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

## இன்றைய பலன்

3-11-68

ஐப்பசி 18 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- திரயோதசி. பகல் 7-37 மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம்- ரேவதி. இரவு 7-43 மேல் அச்சுவினி.

ராகுகாலம் - 4-34— 6-04.

சுபநேரம் - 9-04— 10-34.

இன்று பிறந்தவர்களுக்கு: வரவேற்க தக்க சம்பவங்கள் இடம் பெறும். காதலர்களுக்கு உவப்பான காலம். இல்லறத்தில் இனிமை தவழும். தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தவும். தூரத்துச் செய்தி யொன்று சிறிது கவலையைத் தரலாம். எதற்கும் அவசர முடிவைத் தவிர்க்கவும்.

மேஷம்- அலைமோதும் மனம். அற்ப இலாபம்.

ரிஷபம்- குடும்ப நலன், குதூகல மிகுதி.

மிதுனம்- ஆதாரக் குறைவு, அவசரக்கோலம்.

கடகம்- கல்வி நலன், அறிஞர்கள் ஆதரவு.

சிம்மம்- அறவழி நாட்டம், தாராள மனம்.

கன்னி- கழுகுப்பார்வை கவலையின் தாக்குதல்.

துலாம்- காதல் செய், கவலைகள் பறக்கும்.

விருச்சிகம்- செய் தொழில் தாமதம், சிந்தனை மிகுதி.

தனுசு- தேடிவரும் உறவால், நாடிவரும் நன்மை.

மகரம்- உற்றதால் கவலை, கடவுள் நம்பிக்கை

கும்பம்- வசதிகள் பெருகும், வளம்சேரும் நிலை.

மீனம்- தொழில் கலை தொல்லைகள் பெருகும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## செலுத்தத் தவறின் சட்ட நடவடிக்கை

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராமசபைக் குட்பட்ட பலர் உள்ளூராட்சிமன்ற உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகேசனைப் பேட்டிகண்டு, தங்களால் கிராமசபைக்குச் சேரவேண்டிய சோலைவரியைக் கட்டமுடியாதிருப்பதாகத் தெரிவித்தனர்.

கிராமசபைக்குச் சேர்மதியான சோலைவரியைக் கட்டாயம் செலுத்தவேண்டும் என்று கூறிய உதவி ஆணையாளர், கட்டத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தாராம்.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

உடுப்பிட்டி, சனி

வடமாநிலத்தில் தொடர்ந்து பத்து ஆண்டுகள் சேவைசெய்தவர்களுக்கு கல்வி அதிகாரியினால் வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம்பெற்றுச் செல்வதற்கு தயாராக இருக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பணிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையானோர் பெண் ஆசிரியைகளாம். 1958-ம் ஆண்டு கருப்புக்கலவரத்தின்போது வெளிமாகாணங்களில் இருந்து வடபகுதிக்கு மாற்றம்பெற்றுவந்த பலருக்கும் இடமாற்றம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.


# நெற்பயிரோடு போட்டியிட்டு

வளரும் அகன்ற இலை, களைகள், கோரை வகை ஆகிய களைகளை அழிக்க



சந்தனக்கோரை

சிறுகோரை

ஹெடோனல் "எம்" 40% எம். சி. பி. ஏ கொண்டது

ஹெடோனல் "டி" 55% 2. 4 டி கொண்டது

விதைத்து 3 கிழமைகளுக்குப் பின்னரும், 6 கிழமைகளுக்கு முன்னரும் பாவிக்கவும்.

விபரங்களுக்கு எழுதுக:

ஹேலீஸ் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட் — கொழும்பு- 10.

தொலைபேசி: 5...

HAYLEYS

BAYER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள நியந்தனை இல்லை
## நிறுத்தப்பட்ட சம்பள உயர்வுமில்லை

வெள்ளவத்தை சனி

சிங்களம் படிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்குத் திறைசேரி சுற்றறிக்கை வெளியிட்டுப் பலமாதங்களாகியும் இதுவரை அனேகமான பழைய தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வு மீதிகள் கொடுக்கப்படவில்லையாம். இக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. மா. பாலகிருஷ்ணன் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதுசம்பந்தமாக அரசாங்கத் தலைவர்களுடனும் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது

# ஆசிரியர் நேரடி நடவடிக்கை

பருத்தித்துறை, சனி

அகில இலங்கை ஆசிரியர் சங்கங்கள் தமது பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து நடாத்தவிருக்கும் போராட்டத்தில், நேரடி நடவடிக்கையும் இடம்பெறக்கூடுமெனத் தெரிகிறது. இம்மாதம் 3-ம் திகதி கொழும்பில் நடக்கவிருக்கும் ஆசிரியர் சங்க சம்மேளன மாநாட்டில் இதுபற்றிய இறுதி முடிவுகள் தீர்மானிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. வடமாகாண ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளாக திரு. ஏ. வைத்திலிங்கம் திரு. எஸ். பி. நடராசா ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்வர்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குருநகர் கிராமசேவையாளராகக் கடமையாற்றிய திரு. ஏ. டொமினிக் பூநகரிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடியைச் சேர்ந்த மருதனார் விவசாயி முருகேசு செல்லையா அவர்கள் இறைபதமடைந்துவிட்டார். இவர் யாழ்ப்பாணம் சமூகசேவைப் பகுதி ஏ. சி. நடராசா, திருகோணமலை தபால்நிலையத்தைச் சேர்ந்த க. யோகராசா ஆகியோரின் அருமை மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 8-11-68 பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு இறுதிச்சடங்குகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அழைக்கப்படுகின்றனர். 152

பள்ளி செல்கையில்

## சிறுவன் மரணம்

முல்லைத்தீவு சனி

முல்லைத்தீவைச் சேர்ந்த வண்ணாங்குளம் வைக்கோ இஸ்மயில் என்பவருடைய மகன் நவாஸ் [வயது 7] பாடசாலைக்குச்செல்லும் வழியில் திடீரெனத் தூக்கி வீசப்பட்டு அடி தடித்து மரணமானார்.

விசாரணை செய்த முல்லைத்தீவு மரணவிசாரணை அதிகாரி இயற்கைமரணமெனத் தீர்ப்பளித்தார்.

## ரூ. 9,500 அபராதம்

வல்வெட்டித்துறை சனி

பொலிசாரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் சுங்கப்பகுதியினரால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மாதம் 19-ம் திகதி பருத்தித்துறை பொலிசாரால் திக்கம் என்னுமிடத்தில் கைப்பற்றப்பட்ட 15 சாம்பு மூட்டையும், லொறியும் இதுவரை சுங்கப் பகுதியினரிடம் இருந்து வந்தது.

சுங்க இலாகா இதுபற்றி விசாரணை செய்த பின்னர் லொறிக்கு ரூபா 9,500 அபராதம் விதித்து, பொருட்களை உரியவர்களிடம் திருப்பிக் கொடுத்தது.

## குருபூசை

சுழிபுரம், சனி

யாழ். சைவசித்தாந்த சங்கத்தினரால் நடத்தப்படும் திருமூலநாயனார் குருபூசை வருகிற திங்கட்கிழமை பழங்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறவிருக்கின்றது.


# வின்ஸர்

(புதிய கட்டிடம்)
யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்: 10-30, 2 30, 6-30, 9-45

சிவாஜி கணேசன் — பத்மினி — K. R. விஜயா
நாகேஷ் — மனோரமா
நடித்த

# இரு மலர்கள்

டிக்கற் விபரம்:-

பல்கனி— ரூபா 3-00 வரி உட்பட
றிசேவ்ட்— ரூபா 2-50 வரி உட்பட
முதலாம் வகுப்பு—ரூபா 2-00 வரிஉட்பட
இரண்டாம் வகுப்பு—ரூபா 1-50 வரிஉட்பட
கலரி (கதிரை)—சதம் 75 வரி உட்பட


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# 5ம் எதிரி விடுதலை
## தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை சனி

கரணவாயைச் சேர்ந்த எம். மயில்வாகனம், ம. கமலாம்பிகை, க. குலசிங்கம் செல்வநாயகம், க. செல்லத்துரை, ம. சுபத்திராதேவி ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா பெண் செல்லம்மாவை கடந்த ஏப்ரல் மாதம் 18-ந் திகதி வீட்டில் அத்துமீறிப் பிரவேசித்து கத்தியால் வெட்டியும், அடித்தும் காயப்படுத்தியதாக பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சி. செல்லம்மா, சி. விக்னேஸ்வரி, செ. இளையதம்பி சார்ஜன்ட் ஜே. சி. இராசையா ஆகியோர் சாட்சியமளித்தபின்னர் மாஜிஸ்திரேட் 5-ம் எதிரியான செல்லத்துரையை விடுதலை செய்தார். மற்றும் ஐந்து எதிரிகளை குற்றவாளியாகக்கண்ட நீதிபதி தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். 3-ம் எதிரியான குலசிங்கத்தை இம்மாதம் 10-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## பிரயாணிகள் கஷ்டம்

சித்தன்கேணி, சனி

யாழ்ப்பாணத்திலிருந்து நவாலி - சங்கரத்தை ஊடாகக் காரைநகர் செல்லும் பாதையில் 4 பஸ்கள் சேவையிலீடுபட்டு வருகின்றன. இவற்றில் நேற்றும் இன்றும் ஒரு பஸ் பழுதாகியுள்ளதால் மாணவர், உத்தியோகத்தர்கள் கஷ்டமடைந்தனர். இச்சிரமத்தை நீக்க நல்ல பஸ்களைச் சேவையிலீடுபடுத்துமாறு நவாலி-சங்கரத்தை பஸ் பிரயாணிகள் வடபகுதி இ. போ. ச. முகாமையாளரை மகஜர் ஒன்றின் மூலம் கோரவுள்ளனர்.

## 'யானை வரும் பின்னே...'

பருத்தித்துறை சனி

அடுத்தாண்டு ஆரம்பத்தில் இடமாற்றத்துக்கு ஆயத்தமாகும்படி வடமராட்சி பகுதியிலுள்ள நூற்றுக்கு ளுக்குக் கல்விப் பகுதி அறி மேற்பட்ட ஆசிரியர்க வித்துள்ளது. மேலும் இவ்வறிவித்தற் கடிதங்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கக் கூடாதென்றும் இவ்வறிவித்தல்கள் கூறுகின்றன. பாடசாலைப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகுமுன் இவ்வித இடமாற்றங்களால், பாடசாலைகளில் மீண்டும் நிர்வாகச் சீர்கேடுகள் தலைதூக்குமென இப்பகுதிக் கல்லூரி அதிபர்களும், தொழிற்சங்கப் பிரமுகர்களும் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

## வட்டார எல்லைகள் நிர்ணயிப்பு

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராமசபைப் பகுதியுடன் இணைந்திருந்த சில பகுதிகள் புதிய பண்டத்தரிப்பு பட்டின சபையுடன் இணைவதால், சுழிபுரம் கிராமசபை வட்டார எல்லைகள் அளவைப் பகுதியினரால் நிர்மாணிக்கப்பட வேண்டிய வேலைகள் நடைபெறுகின்றன. எல்லா வட்டார எல்லைகளும் அளவைப் பகுதியினரால் அனைக்கப்பட்டு சுழிபுரம் கிராமசபைக்கான ஒரு புதிய [illegible] நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

# வியட்நாம் குண்டு வீச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

'வியட்காங்கிகள்' எனப்படும் தேசிய விடுதலை முன்னணியினர் தான் வடக்கு, தெற்கு வியட்நாம் அரசாங்கப் பிரதிநிதிகள் சமரசப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகத் தெரிகிறது.

## மகாநாட்டில் ஹனோய் கலந்துகொள்ளும்

பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வியட்நாம் பிரச்னை சம்பந்தமான மகாநாட்டில் அடுத்த புதன்கிழமை வடவியட்நாம் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென்று வடவியட்நாம் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. வடவியட்நாம் மீது குண்டுவீச்சை நிறுத்துவதற்கு அமெரிக்க அதிபர் உத்தரவிட்டதை பாரிஸ் பேச்சுகளில் கலந்துகொள்ளும் வடவியட்நாம் பிரதிநிதி 'நிபந்தனையற்ற உத்தரவு' என்று தெரிவித்திருக்கிறார்.

## தியூ அரசுக்கு தகுதியில்லை

பாரிஸ் சமரசப் பேச்சுக்களில் புதன்கிழமை வடவியட்நாம் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களென்று வடவியட்நாம் அரசாங்கம் தெரிவித்துள்ளபோதிலும், தென்வியட்நாமிலுள்ள தியூ அரசாங்கம் அமெரிக்காவின் 'கைப்பாவை' அரசாங்கமென்றும் தென்வியட்நாம் மக்களுக்காகப் பேசும் தகுதி வியட்காங்கினர் எனப்படும் தேசிய விடுதலை முன்னணியினருக்கே உண்டு என்றும் தெரிவித்திருக்கிறது.

## பேச்சில் பங்குபற்ற சைகோன் மறுப்பு

வியட்நாம் சம்பந்தமான பாரிஸ் மகாநாட்டில் தென்வியட்நாம் அரசாங்கப்பிரதிநிதிகள் அடுத்த புதன்கிழமை கலந்துகொள்ளமாட்டார்களென்றும் வடவியட்நாம்மீது குண்டுவீச்சு நிறுத்தப்பட்டாலும் அது சம்பந்தமாக நேரடிப்பேச்சு நடத்துவதற்கு இன்னும்சரியான சூழ்நிலை ஏற்படவில்லையென்றும், வியட்காங்கியரான தேசியவிடுதலை முன்னணியினரை வடவியட்நாம் அரசாங்கத்தின் ஓர் அம்சமாக ஏற்றுக்கொள்ள முடியுமேதவிர தனியாக அவர்களை அங்கீகரித்து அவர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இல்லையென்றும் தென்வியட்நாம் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. வடவியட்நாம்மீது குண்டுவீச்சு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமானால் பாரிஸ் மகாநாட்டுடன் அதைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்றும் தனியாக அப்பேச்சுக்களை நடத்தலாம் என்றும் தென் வியட்நாம் தெரிவித்திருக்கிறது. தென்வியட்நாம் அதிபர் தியூ இன்று தென்வியட்நாம ஆசியமன்றக் கூட்டத்தில் உரைநிகழ்த்தினார்.

## ஹனோயைப் பொறுத்திருக்கிறது

வடவியட்நாம் மீதான குண்டுவீச்சு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அடுத்து இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சி வடக்கு வியட்நாமைப் பொறுத்திருக்கிறதென்றும் வியட்நாம் பிரச்னைக்குத் தீர்வுகிடைக்க வேண்டுமானால் வடவியட்நாம்மீதான குண்டுவீச்சு நிறுத்தப்பட வேண்டுமென யோசனை தெரிவித்தவர்கள் நேரடிப்பேச்சுக்கு ஹனோயைச் சம்மதிக்கவைத்துவழிக்குக் கொண்டுவருவதற்கு தமது செல்வாக்கை உபயோகிக்கவேண்டுமென்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. டீன்றஸ்க் தெரிவித்திருக்கிறார்.

பாரிஸிலிருக்கும் வடவியட்நாம் மந்திரியும் அமெரிக்க அதிபருக்கான விசேஷ தூதுவர் திரு ஹரிமனும் பிரஞ்சு வெளிவிவகார அமைச்சரை இன்று தனித்தனியாக சந்தித்துப் பேசினர்.

## அமெரிக்க...

1-ம் பக்கத் தொடர்ச்சி

திக மாஜிஸ்டிரேட் திரு. எச். டபிள்யு. சேனநாயகா இன்று தமது தீர்ப்பை வழங்கினார்.

வழக்காளி தரப்பில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களை தான் நம்புவதாக நீதிபதி தெரிவித்தார். அரசியல் ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஆனால் இந்த எதிர்ப்பு தனிப்பட்ட முறையில் ஒருவரின் கௌரவத்தைக்குறைப்பதாக இருக்கக்கூடாது. இவ்வித எதிர்ப்புக்கள் ஏற்கக்கூடியவை அல்ல'' என்று நீதிபதி தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு 50 ரூபாய் அபராதம் விதித்துத்தீர்ப்பளித்தார். அபராதம் செலுத்தத் தவறினால் இரண்டு வாரம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார். அபராதத்தைச் செலுத்துவதற்கு இம்மாதம் 15-ந் திகதிவரை நீதிபதி அவகாசமளித்தார்.

## 'அபாய அறிவிப்பு'

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதி மக்களுக்கு முதலாவது அபாய அறிவிப்பு ஒன்றை தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கம் விடுத்துள்ளது. இந்த அறிவிப்பு மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தின் பற்றுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 86 வருட காலமாக இப்பகுதி மக்களுக்கு மோட்டார் வள்ள சேவையைச் செய்து வந்த இந்தச் சங்கம் முதல் தடவையாக இம்முறை தனது பற்றுச்சீட்டில் 'குலைக்கப்படுகின்ற தீவுப்பகுதி மோ. வ. ஐ. சங்கம்' எனக் குறிப்பிட்டிருப்பதே இந்த அறிவிப்பாகும்.

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, மக்களுக்கு மோட்டார் வள்ள சேவை செய்து வந்த இச்சங்கம் குலைக்கப்பட்டால் இப்பகுதி கடலில் பிரயாணம் செய்வது என்பது இங்கு எழுந்துள்ள மற்றொரு கேள்வியாகும். [சா. நி.]

## முட்டுக்கட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டு விடவேண்டுமென்றும் சில அங்கத்தவர்கள் பிரதமரைக்கேட்டுக்கொண்டனர்.

இ. போ. ச. பஸ்சேவை பற்றியும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. பஸ் சேவை மிகவும் மோசமான நிலையை அடைந்துகொண்டு போகிறதென்றும், நல்ல முறையில் சீரமைக்கவேண்டுமென்றும் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உருத்திரபுரம் சனி

யாழ்ப்பாணத்திலிருந்து காலையில் உருத்திரபுரம் செல்லும் பஸ்சேவை கடந்த சில தினங்களாக இல்லாததால் உருத்திரபுரம் செல்லும் பிரயாணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org